# மேனிலை இரண்டாம் வகுப்பு

# வணிகவியல்

## அரசு மாதிரி வினாத்தாள் - 2

## விடை குறிப்புகள்

### பகுதி - அ

சரியானவிடை

| | |
|---|---|
| 1. இ. கூட்டுப் பங்கு நிறுமம் | 11. அ. 21 |
| 2. ஆ. துறைவாரி அமைப்பு | 12. ஆ. குறைவெண் |
| 3. அ. ஒப்பந்தத்தால் | 13. அ. கலைமான் |
| 4. அ. வரையறாப் பொறுப்பு | 14. அ. மும்பை |
| 5. அ. உறங்கும் கூட்டாளி | 15. ஆ.1956 |
| 6. ஆ. விருப்பத்தின் பேரில் | 16. இ. ஆதரவின் அடிப்படையில் |
| 7. ஆ. வரையறாப் பொறுப்பு | 17. ஈ. வரம்பு எதுவும் இல்லை |
| 8. ஆ. ரூ. 10 | 18. ஈ. வரையறுக்கப்படாத செயல் சுதந்திரம் |
| 9. இ. நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி | 19. ஆ. இந்திய நிறுமச்சட்டம் 1956 |
| 10. இ. இயக்குநர் அவையால் | 20. இ. துறைவாரி அமைப்பு |

### பகுதி - ஆ

21. கர்த்தாவின் பொறுப்பு எத்தகையது?

- ❖ இந்து கூட்டுக் குடும்பத்தின் வியாபாரத்தை கட்டுப்படுத்துவது மற்றும் மேலாண்மை செய்வது

22. இளவர் கூட்டாளி என்பவர் யார்?

- ❖ 18 வயதை பூர்த்தி செய்யாத நபரை இளவர் என்கிறோம்.
- ❖ நீதி மன்றத்தால், ஒரு காப்பாளர் நியமிக்கப்பட்டிருந்நதால், 21 வயது வரை அவர் இளவராக கருதப்படுகிறார்.

23. நிறுமத்தின் தன்மைகள் இரண்டினைக் கூறுக.

1. தனியான சட்ட நபர் தன்மையுடையது
   - ❖ அதன் உறுப்பினர்களினின்றும் வேறுபட்டு, தன்னிச்சையாகச் செயல்படும் தனிநபர் தன்மையை, நிறுமம் பெற்றுள்ளது.
2. நீடித்த வாழ்வு
   - ❖ உறுப்பினர்களாக நிறுமத்திற்கு நபர்கள், வரலாம் அல்லது உறுப்பினர் நிலையை விட்டுவிட்டுச் செல்லலாம்.
   - ❖ ஆனால் நிறுமம், எப்பொழுதும் இயங்கக்கூடிய ஒன்று.



24. சட்டமுறைக்கூட்டம் என்றால் என்ன?

- i) ஒரு பொது வரையறு நிறுமத்தில் பங்குநர்களின் முதல் கூட்டம்.
- ii) நிறுமங்கள் சட்டப்படி கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- iii) தொழில் தொடங்க உரிமை பெற்ற ஆறு மாதங்களுக்குள் ஒரு மாதத்திற்குப் பின்னர் இக்கூட்டத்தைக் கூட்ட வேண்டும்.
- iv) நிறுமத்தின் வாழ்வுக் காலத்தில், ஒரு முறை மட்டுமே நடைபெறும் கூட்டம் இது.

25. முடவாத்து என்று யாரைக் குறிப்பிடுவர்?

- ❖ பத்திர நடவடிக்கைகளில், தற்போது உள்ள இடர்பாடுகளை தீர்ப்பதில் போராடிக் கொண்டிருக்கின்ற, கரடி ஊக வணிகரையே, முடவாத்து என்று அழைக்கப்படுகிறார்.

26. இராபர்ட் ஓவன் பற்றி எழுதுக.

- ❖ இராபர்ட் ஓவன் கூட்டுறவு இயக்கத்தின் தந்தை ஆவார்.
- ❖ இவர் முதல் கூட்டுறவு இயக்கத்தை, இங்கிலாந்தில், 1844 ஆம் ஆண்டு 28 உறுப்பினர்களுடன் இராக்டேல் முன்னோடிகள் சங்கம் என்ற பெயரில் தொடங்கினார்.

27. தமிழ்நாடு சிறு தொழில் நிறுமம் ( TANSI ) எந்த அமைப்பின் கீழ் வரும்?

- ❖ அரசு நிறுமத்தின் கீழ் வரும்.

28. வரையறாப் பொறுப்பினால் விளையும் தீமை என்ன?

- ❖ தனி வணிகரின் வரையறாப் பொறுப்பு, அவருடைய ஆர்வத்தை பாதிப்பதாகவும், வியாபாரத்தில் நவீன எண்ணங்களைப் புகுத்தத் தடையாகவும் உள்ளது.

29. கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிடைக்கும் அரசின் சலுகைகள் யாவை?

- ❖ கூட்டுறவு நிறுவனங்களின் வருவாய்க்கு வருமான வரி விதிக்கப்படுவதில்லை.
- ❖ மேலும், முத்திரைக் கட்டணம், பதிவுக் கட்டணம் ஆகியவற்றிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

30. நிறுமத்தின் பொது இலச்சினைப் (Common Seal) பற்றிக் கூறுக.

- ❖ நிறுமம் ஒன்றின் தனிநபர் தன்மையை, சட்டம் அங்கீகரித்திருப்பினும், மனிதர்களின் உதவியுடன் மட்டுமே அது இயங்கக் கூடியது.
- ❖ அதற்கு உயிரும் இல்லை. உடலுமில்லை.
- ❖ அது சட்டம் உருவாக்கிய நபர்.
- ❖ எனவே பத்திரங்களில், ஒப்பந்தங்களில் கையொப்பம் இட முடியாது.
- ❖ ஆயினும் அதற்கென ஒரு முத்திரை உள்ளது.
- ❖ கையெழுத்திடும் அதிகாரம் பெற்றவர்கள் கையெழுத்திடுவதுடன், நிறுமத்தின் முத்திரையைப் பத்திரத்தில் பதிந்துவிடின், நிறுமமே கையெழுத்திட்டதாகக் கருதப்படும்.

### பகுதி - இ

31. ஒரு நிறுமத்தின் மேலாண்மை கட்டமைப்புக் குறித்து சுருக்கமாக எழுதுக.

- ❖ நிறுமச் செயல்பாடுகளின் மேலாண்மை இயக்குநர் அவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- ❖ இயக்குநர்கள் பங்குநர்களால் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர்.

- பங்குநர்கள் நிறுமத்தின் உரிமையாளர்கள். ஆனால் அதன் மேலாண்மையில் அவர்களால் நேரடியாகப் பங்கேற்க இயலாது.
- ஆயினும் அவர்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற, அவர்களின் பிரதிநிதிகளான இயக்குநர்களின் கைகளில் அது ஒப்படைக்கப்பட்டிருப்பதால், பங்குநர்கள் நிர்வாகத்தில் மறைமுகமாகப் பங்கேற்போராக உள்ளனர்.

32. **கூட்டுறுவாக்கச் சான்றிதழ் என்றால் என்ன? இது எந்நிறுமத்திற்குக் கட்டாயமாகத் தேவைப்படும்?**

1. நிறுமத்தை, நிறுமப் பதிவாளரிடம் பதிவு செய்ய, போதுமான சட்ட விதிமுறைகள் அனைத்தும் பின்பற்றப்பட்டு விட்டன என்ற உறுதி விளம்பலை பதிவாளரிடம் தாக்கல் செய்ய வேண்டும்.
2. இந்த ஆவணங்கள் அனைத்தையும் நிறுமப் பதிவாளர் கூர்ந்தாய்ந்து, அவை சரியாக உள்ளது என, அவர் வழங்கும் சான்றிதழையே, கூட்டுறுவாக்கச் சான்றிதழ் எனப்படுகிறது.
3. தனி வரையறு நிறுமத்திற்கு கட்டாயம் தேவைபடும்.

33. **கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையால் ஏற்படும் விளைவுகள் ஏதேனும் மூன்றைக் கூறுக.**

1. நிறுவனத்திற்கு எதிராகவோ, கூட்டாளிகளுக்கு எதிராகவோ மூன்றாவது நபர் எவரும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது.
2. கூட்டாளிகளை எதிர்த்து நிறுவனம் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.
3. மூன்றாவது நபர் மீது, தனக்கு சேரவேண்டிய பாக்கிப் பணத்தைப் பெற நிறுவனம் வழக்குத் தொடுக்க முடியாது.
4. நிறுவனத்தின் வியாபாரக் குறிகள், பதிப்புரிமைகளை வெளியாட்கள் பயன்படுத்தக் கூடாது என தடுக்க முடியாது
5. பதிவு செய்யா நிறுவனம், மூன்றாம் நபருக்கு எதிராக தொகை ரூ.100க்கு மேல் திரும்பப் பெற, அதனுடைய உரிமையை செயல்படுத்த இயலாது.

34. **சட்ட முறை நிறுமம் என்றால் என்ன? எ.கா. தருக.**

- நாடாளுமன்றத்தின் அல்லது மாநிலச் சட்ட மன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையில், உருவாக்கப்படும் நிறுமங்கள், சட்டமுறை நிறுமங்கள் எனக் கூறப்படுகின்றன.

<u>எ.கா</u> : இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்

35. **பன்னாட்டு நிறுமத்தின் சிறப்பியல்புகள் யாவை?**

1. ஒரேசமயத்தில் பல நாடுகளில் நடத்தப்படும் வியாபாரம்
2. மிகப் பெரிய அளவில் நடைபெறும் வியாபாரம்
3. போக்குவரத்து செலவுகள் குறைந்த வியாபாரம்
4. இச்செலவுகளை குறைப்பவை கச்சாப்பொருட்கள், பணியாட்கள், சந்தை ஆகியவை.

36. **மக்களாட்சி முறையில் மேலாண்மை - விளக்குக.**

- கூட்டுறவு அமைப்பின் மேலாண்மை, மக்களாட்சி முறையில் அமைந்துள்ளது.
- எவ்வளவு முதலீடு செய்திருப்பினும் உறுப்பினர்களுக்கு சமமான வாக்குரிமை உண்டு.
- ஆளுக்கொரு வாக்கு என்ற தத்துவம் கடைபிடிக்கப்படுகிறது.



- பெருமளவில் பங்குகளை வைத்துள்ளவர்களின் கைகளில் அச்சங்கங்கள் கட்டுண்டு கிடப்பதில்லை.

37. **அரசுத் தொழிலம்மைப்பை எவ்வாறு உருவாக்கலாம் ?**

- அரசே முதலீடு செய்து புதிய தொழில் நிறுவனங்களை அமைத்து, மேலாண்மை செய்யலாம்.
- ஏற்கனவே தனியார் துறையில் இயங்கிவரும் தொழில் மற்றும் வணிக அமைப்புகளை, அரசின் கட்டுப்பட்டில் கொண்டுவந்து நாட்டுடைமையாக்காலாம்.

38. **தனியாள் வணிகம் வரைவிலக்கணம் தருக.**

( ஏதேனும் ஒரு வரைவிலக்கணம் )

- P.K. கோஷ் மற்றும் Y.K. பூஷன் ஆகியோரின் கூற்றுப்படி, தன் சொந்த மூலதனத்தை முதலீடு செய்து, தன் சொந்த திறனையும், நுண்ணறிவையும் பயன்படுத்தி, வியாபாரத்தின் இலாப நட்டங்களை தானே ஏற்றுக் கொள்ளும் ஓர் அமைப்பு தனியாள் வணிகமாகும்.

39. தனி நிறுமம் - பொது நிறுமம் - உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கூறு. ( குறைந்தது மற்றும் அதிகபட்சம் )

| வேற்பாடு காரணிகள் | தனி வரையறை நிறுமங்கள் | பொது வரையறை நிறுமங்கள் |
|---|---|---|
| உறுப்பினர் எண்ணிக்கை | குறைந்த அளவு 2 பேர்.<br>அதிக அளவு 50-க்கு மிகாமல் இருக்க வேண்டும். | குறைந்த அளவு ஏழு பேர்.<br>அதிக அளவிற்கு வரம்பு இல்லை. |

40. **ஊக வணிகர்களின் வகைகளை விவரி.( ஏதேனும் மூன்று )**

<u>காளை:</u>

4. பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேறும் என்று எதிர்பார்ப்பவர்.
5. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.
6. இவர் தெஜீவாலா என அழைக்கப்படுகிறார்.

<u>கரடி :</u>

4. பத்திரங்கள் எதிர்காலத்தில் விலை குறையும் என்று எதிர்பார்ப்பவர்.
5. எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.
6. இவர் மண்டிவிலா என அழைக்கப்படுகிறார்.

<u>கலைமான் :</u>

4. முன்னெச்சரிக்கை உடையவர்.
5. பங்குகள் முனைமத்தில் விற்கப்படும் என அறிந்தவுடன் புதிய வெளியீடுகளுக்கு விண்ணப்பம் செய்வர்.
6. இவர் முனைம வேட்டையாளர் என அழைக்கப்படுகிறார்.

<u>முடவாத்து :</u>

1. பத்திர நடவடிக்கைகளில் தற்போது உள்ள இடர்பாடுகளை தீர்ப்பதில் போராடிக் கொண்டிருப்பர்.
2. குறிப்பிட்ட நாளில் தமது தீர்வை முடிக்க முடியாமல் முடக்கப்பட்ட நிலையில் இருப்பார்.

<u>பகுதி - ஈ</u>

41. **அ) கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விவரி.**

**(ஏதேனும் ஐந்தினை மட்டும் எழுதவும்)**

அ) <u>நீதிமன்ற ஆணையில்லாமல் கலைப்பு (பிரிவு 40 முதல் 43 வரை)</u> :

1) உடன்பாட்டால் கலைப்பு (பிரிவு 40) :

- அனைத்துக் கூட்டாளிகளின் சம்மதத்தின் பேரில் அல்லது கூட்டாளிகளுக்கிடையே ஏற்படும் உடனபாட்டால் கூட்டாணமை நிறுவனம் கலைக்கப்படலாம்.

2) கட்டாயக் கலைப்பு (பிரிவு 41) :

i) அனைத்து கூட்டாளிகளின் நொடிப்பு நிலையாலோ அல்லது

ii) ஒருவர் தவிர மற்ற எல்லாக் கூட்டாளிகளின் நொடிப்பு நிலையாலோ கூட்டாண்மை நிறுவனம் கட்டாயம் கலைக்கப்படும்.

iii) செய்துவரும் தொழில் சட்டத்திற்குப் புறம்பானதாக இருந்தால், நிறுவனம் கட்டாயமாக கலைக்கப்படும்

(எ.கா.) மது விலக்குச் சட்டம் இயற்றப்படுதல், மற்றொரு நாட்டுடன் போர் ஏற்படுதல்.

3) சில நிகழ்ச்சிகள் நிகழ்வுறுவதால் கலைப்பு (பிரிவு 42) :

i) ஒரு கூட்டாளி இறந்து விட்டால்

ii) குறிப்பிட்ட காலத்திற்கான கூட்டாண்மையாயின், அக்காலம் முடிவடைந்துவடன்

iii) குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய மட்டுமே கூட்டாண்மை தொடங்கப்பட்டிருப்பின், அத்தொழில்கள் நிறைவு பெற்றுவுடன் .

iv) ஒரு கூட்டாளி நொடிப்பு நிலை அடைந்து விட்டதாக, நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால் கூட்டாண்மை கலைக்கப்படும்.

4) அறிவிக்கையால் கலைப்பு (பிரிவு 43) :

- கூட்டாளி எவரேனும் நிறுவனத்தைக் கலைக்கும்படி, பிற கூட்டாளிகளுக்கு எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தால் நிறுவனம் கலைக்கப்பட வேண்டும்.

## ஆ) நீதிமன்றத்தால் கலைப்பு (பிரிவு 44) :

- கூட்டாளிகளுள் ஒருவர் கீழ்காணும் காரணங்களுக்காக வழக்கு தொடர்ந்து நிறுவனத்தைக் கலைக்கலாம்.

i) கூட்டாளியின் மனச்சமநிலை இழப்பு :
ஒருவர் பித்து நிலையடைந்தால் , நீதிமன்றம் கலைப்பிற்கான ஆணையைப் பிறப்பிக்கலாம்.

ii) நிலையான திறமையின்மை :
கூட்டாளி ஒருவர் தொழில் செய்யும் திறமையை இழந்திருந்தால், நிறுவன கலைப்பிற்கான ஆணையை நீதிமன்றம் பிறப்பிக்கும்.

iii) உடன்பாட்டை தொடர்ந்து மீறுகை :
கூட்டாண்மை உடன்பாட்டை ஒரு கூட்டாளி தொடர்ந்து மீறிக் கொண்டிருந்தால், மற்றக் கூட்டாளிகள் கூட்டாண்மையை கலைக்கக் கோரி நீதி மன்றத்தை அணுகலாம்.

iv) கூட்டாளி ஒருவரின் ஒழுக்கக்கேடு :
கூட்டாளி ஒருவர் ஒழுக்கக்கேடான குற்றத்தை செய்திருப்பின், ஏனைய கூட்டாளிகள் நிறுவனத்தை கலைக்கக்கோரி வழக்குத் தொடுக்கலாம்.

v) உரிமைமாற்றம் :
கூட்டாளி ஒருவர், தொழிலில் தனக்குரிய உரிமை முழுவதையும், மூன்றாம் நபருக்கு மாற்றிக் கொடுத்துவிட்டால், ஏனைய கூட்டாளிகள் கூட்டாண்மையைக் கலைக்கக்கோரி நீதிமன்றத்தை அணுகலாம்.

vi) நீதி நேர்மை அடிப்படையில் :
நிறுவனத்தைக் கலைத்திடப் போதிய அடிப்படை காரணம் உள்ளது, என்று நீதிமன்றம் கருதினால் கூட்டாண்மை கலைக்கப்படலாம்.

( அல்லது )



## 41 ஆ) அரசுத் தொழில்களின் நோக்கங்களில் ஐந்தினை விவரி.

1. பல்வகை உற்பத்தி செய்ய உதவுவது :
   - இலாபம் ஈட்டுவதிலேயே குறியாக இருக்கும் தனியார் தொழில் முனைவோர், இலாப வாய்ப்பு மிகுந்த தொழில்களில் மட்டும் முதலீடு செய்ய விரும்புவர். இலாப வாய்ப்புகள் அதிகம் இல்லாத, அதே சமயம் நாட்டுக்குத் தேவையான,தொழில்களில் முதலீடு செய்ய விரும்பமாட்டார்கள்.
   - தனியார் துறை மேற்கொள்ள அஞ்சும் தொழில்களில் முதலீடு செய்து மக்களுக்குச் சேவையாற்றுவதற்கு அரசு நிறுவனங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகின்றது.
2. அடிப்படைத் தொழில்கள் வளர்ச்சி :
   - பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத தொழில்களை அடிப்படைத் தொழில்கள் எனலாம்.
   - எடுத்துக்காட்டாக இரும்பு, எஃகு ஆலைகள், வேதியியல் தொழில்கள் போன்றவை அடிப்படைத் தொழில்களாகும்.
   - இத்தகைய தொழில்கள் அரசுத் தொழில்களாகவே இருப்பதே சாலச்சிறந்தது.
3. பேரளவு முதலீட்டு நிறுவனங்கள் :
   - சில தொழில் நிறுவனங்களில் பேரளவு முதலீடு செய்யப்பட வேண்டும்.
   - மேலும், அந்நிறுவனங்களில் தொழில் உற்பத்தித் தொடக்கக் காலம் நீண்டதாக இருக்கும்.
   - தனியார் தொழில் முனைவோர்களால் அப்பேரளவு முதலீட்டினை அளிக்கமுடியாது.
   - எ.கா : இரயில், கப்பல் கட்டுவது, மின்சக்தி
   - எனவே, அத்துறையில் அரசே தனக்குச் சொந்தமான நிறுவனங்களை ஏற்படுத்தும்.
4. இன்றியமையாத வசதிகளை நல்குவது :
   - குடிநீர், மின் உற்பத்தி, மின் சக்தி, எரிவாயு, போக்குவரத்து, தகவல் தொடர்பு போன்றவை நாடு முழுவதும் அன்றாடம் தேவைப்படும் இன்றியமையாத வசதிகள் ஆகும்.
   - இத்தேவைகள் மிகக் குறைந்த விலையில் பூர்த்தி செய்யப்படவேண்டும்.
   - எனவே, இவ்வசதிகளைச் செய்து தரும் அமைப்புகள் அரசுத் தொழில்களாகவே இயங்க வேண்டும்.
   - அவற்றைத் தனியாரிடம் ஒப்படைக்க இயலாது.
5. முற்றுரிமை நிறுவனங்களை ஏற்படுத்துவது :
   - ஒரு நாட்டை அயல் நாடுகளின் தாக்குதலிலிருந்து காப்பது மிகவும் இன்றியமையாதது.
   - நாட்டின் பாதுகாப்புச் சார்ந்த தொழில்கள் தனியார் வசமிருந்தால் ஒரு நெருக்கடி ஏற்படும் பொழுது அவர்கள் அரசுக்கு முழு ஒத்துழைப்பை நல்காமல் போகும் நிலை உருவாக வாய்ப்புண்டு.
   - மேலும் அவர்கள் நாட்டின் பாதுகாப்பு குறித்த இரகசியங்களை எதிரி நாடுகளுக்குச் சொல்லக்கூடிய அபாயமும் இருக்கிறது.
   - எனவேதான், பாதுகாப்புத் தொழில்களை எப்போதும் அரசே ஏற்று நடத்தி வருகிறது.
6. அனைத்துப் பகுதிகளும் சமமாக பொருளாதார வளர்ச்சி பெறுதல் :
   - தொழில், உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் நாட்டிற்குத் தேவையான அனைத்து உற்பத்தித், தொழில்களை ஏற்படுத்துவதேயாகும். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமச்சீரான முன்னேற்றம் ஏற்பட வேண்டும். தனியார் துறையினர், இலாபம் ஈட்ட வாய்ப்பு இல்லாத, மற்றும் நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைக்க விரும்புவதில்லை.

- ❖ இப்பகுதிகளில் தொழில்களை அமைக்கத் தனியார் துறையினரை அரசு ஊக்குவிக்கலாமே தவிர, கட்டாயப்படுத்த முடியாது.
- ❖ அந்நிலையில் அரசு அங்கு தொழில்களை நிறுவுவது சாலச் சிறந்தது.

42. அ) **அமைப்பின் கோட்பாடுகளில் ஐந்தினை விளக்குக.**

1. நோக்கங்களின் ஒருமை :
   - ❖ ஒரு நிறைவேற்ற இருக்கும் நோக்கம் என்பது இலக்கினை அடையக் கூடியதாக இருக்க வேண்டும்.
   - ❖ ஒரு அமைப்பானது அதன் குறிக் கோள்களைத் தெளிவாக முடிவு செய்யவேண்டும்.
   - ❖ அமைப்பின் ஒவ்வொரு நடவடிக்கையும் , குறிக்கோள்களை நிறை வேற்றக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.
2. வேலைப் பகிர்வு :
   - ❖ தொழில் அமைப்பின் மொத்தப் பணி சுமைகளையும் பகிர்வு செய்யவேண்டும்.
   - ❖ இது துறைப்படுத்துதல் என அழைக்கப்படுகிறது.
   - ❖ அனைத்து நடவடிக்கைகளையும் திட்டமிடுதல் வேண்டும்.
   - ❖ ஒரு சக்தி வாய்ந்த அமைப்பிற்கு சிறப்பீடுபாடு ஏற்புடையதாகும்.
3. கட்டுப்பாட்டு வீச்செல்லை:
   - ❖ ஒரு அதிகாரி எத்தனை கீழ்ப்பணியாளர்களை சிறந்த முறையில் நிர்வகிக்க முடியும் என்பதை கட்டுப்பாட்டு வீச்செல்லை குறிக்கும்.
   - ❖ ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ், நியாயமான எண்ணிக்கையிலுள்ள கீழ்ப்பணியாளர்களை மேற்பார்வை செய்ய வேண்டும்.
4. தரவரிசைக் கோட்பாடு:
   - ❖ ஆணையுரிமையின் வரிசை உயர் மட்டத்திலுள்ள உயர் அலுவலரிடமிருந்து, கீழ்மட்டத்திலுள்ள தொழிலாளர்கள் வரை படிப்படியாக கீழ்நோக்கி வரவேண்டும்.
   - ❖ இதற்கு கட்டளை இணைப்பு என்று பெயர்.
5. கட்டளையொருமை / ஒருமித்த உத்தரவு :
   - ❖ ஒவ்வொரு பணியாளரும் ஆணைகளை ஓர் உயர் அதிகாரியிடமிருந்து பெற வேண்டும். ஒரு பணியாளர் இரண்டு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது கடினம்.
   - ❖ இரண்டு உயர் அதிகாரிகளின் கீழ் பணியாற்றுவது தவிர்க்கப்பட வேண்டும். அப்படியிருந்தால் குழப்பமும் ஒழுங்கின்மையும் ஏற்படும்.
6. பணிவழி வரைவிலக்கணம் :
   - ❖ ஒரு பணியாளரின் ஆணையுரிமையும் , பொறுப்பும் தெளிவாக வரையறுக்கப்படுதல் அவசியம்.
   - ❖ ஒவ்வொரு பணிகளுக்கிடையேயுள்ள தொடர்புகளை தெளிவாக குறிப்பிடவேண்டும்.
7. ஒருங்கிணைத்தல் :
   - ❖ ஒரு அமைப்பின் விரும்பத்தக்க இலக்குகளை அடைய, அனைத்து நடவடிக்கைகளையும் ஒருங்கிணைக்க வேண்டும்.
   - ❖ ஒவ்வொரு துறையின் பணிகளும் எல்லா துறைகளுடன் ஒன்று கூடி, ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டும்.
   - ❖ கொள்முதல் துறையும் ,விற்பனைத்துறையும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.
8. ஒரு முனை இயக்கம் :
   - ❖ ஒவ்வொரு குழு நடவடிக்கைகளின் தொகுதியின் நோக்கங்களை வெற்றியடைய, ஒரு தலைமையும், ஒரு திட்டமிடுதலும் இருக்க வேண்டும்.
   - ❖ அமைப்பின் நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கவும் , பணிகளை நிறைவேற்றவும் இது அவசியமாகிறது.
9. அதிகார ஒப்படைவு :
   - ❖ ஒப்படைவு என்பது பணிகளின் ஒரு பகுதியை கீழ் பணியாளர்களுக்கு ஒப்படைப்பதாகும்.
   - ❖ ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளருக்குச் சில பணிகளை ஒப்படைக்கிறார்.
   - ❖ அதை நிறைவேற்ற தேவையான அதிகாரங்களையும் உரிமைகளையும் வழங்க வேண்டும்.
   - ❖ கீழ் பணியாளர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.
10. பொறுப்பு கோட்பாடு :
    - ❖ ஓர் உயர் அலுவலர் தனக்குக் கீழ் பணியாற்றும் பணியாளர்களின் செயல்களுக்குப் பொறுப்பாகிறார்.
    - ❖ அவர் தனது கடமையிலிருந்து முற்றிலும் தப்பிக்க இயலாது.
    - ❖ அலுவலர் தனது மேலதிகாரிக்கு பொறுப்பாகிறார்.

**( அல்லது )**

42 ஆ) **இயக்குருக்குரிய அதிகாரங்கள் யாவை?**

1. பொது ஆதிகாரங்கள்
   - ❖ நிறுமம் எச்செயல்களில் ஈடுபட அதிகாரம் பெற்றுள்ளதோ, அந்த அனைத்துச் செயல்பாடுகளில் ஈடுபடவும், அவற்றிற்கு வேண்டிய அதிகாரங்களைப் பயன்படுத்தவும் ஒரு நிறுமத்தின் இயக்குநரவைக்கு உரிமை உண்டு.
   - ❖ ஆயினும் நிறுமம் எச்செயலையாவது பொதுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படிதான் செய்ய வேண்டும் என்றிருப்பின், அதனை இயக்குநர், தானே செய்யக்கூடாது.
2. சட்டமுறை ஆதிகாரங்கள்
   - ❖ இயக்குநர் அவைக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றி, கீழ்க் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.
     1) அழைப்புப் பணம் செலுத்துமாறு கோரிட
     2) கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட
     3) கடனீட்டுப் பத்திரம் வெளியிடாமல் வேறுவகையில் கடன் பெற
     4) நிறுமத்தின் நிதியினை முதலீடு செய்ய
     5) கடன் வழங்க.
3. இயக்குநரவைக் கூட்டத்தில் பயன்படுத்தக் கூடிய பிறஅதிகாரங்கள்
   1) இயக்குநர் பதவியில் காலியிடம் இருப்பின், அதனை நிரப்ப.
   2) செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருப்பின், கூடுதல் இயக்குநர்கள நியமித்துக் கொள்ள.
   3) செயல்முறை விதிகள் அதிகாரம் வழங்கியிருப்பின், மாற்று இயக்குநர் ஒருவரை நியமிக்க.
   4) எந்த ஒரு இயக்குநரோ, அவருடைய உறவினரோ தொடர்புற்றிருக்கும் ஒப்பந்தங்கட்கு அனுமதி வழங்க
   5) ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் விளம்புவதற்காக பங்காதாயச் சதவிகிதத்தைக் குறிப்பிட்டுப் பரிந்துரைக்க.
   6) அதே மேலாண்மையின் கீழ் இயங்கும் நிறுமங்களில் முதலீடு செய்ய
   7) நிறுமத்தின் முதலாவது தணிக்கையரை நியமிக்க.
   8) பதவி விலகலாலன்றி வேறு காரணத்தால் தணிக்கையர் பதவியில் எழுந்துள்ள காலியிடத்தை நிரப்ப.



B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

43. அ) **தனிநபர் வணிகத்தின் குறைபாடுகளை எழுதுக. (ஏதேனும் 5 விவரி)**

1. அளவான முதல் :
   - தனியாள் வணிக அமைப்பில் தனியாள் உரிமையாளரின் மூலதன ஆதாரங்கள் வரையறுக்கப்பட்டது.
   - இவர் தன்னுடைய சொந்த மூலதனத்தையும் மற்றவர்கள் வழங்கும் கடனையும் மட்டுமே நம்பி இருக்கிறார்.
   - நிதித் தடை தனி வணிகத்திற்கு பெரும் குறையாக உள்ளது.
2. வரையறுக்கப்பட்ட மேலாண்மைத்திறன் :
   - ஒரு தனியாள் வணிக உரிமையாளரின் மேலாண்மைத் திறமைக்கும் எல்லை உண்டு.
   - வியாபார நடவடிக்கைகளாகிய கொள்முதல், விற்பனை மற்றும் கணக்கியல் அனைத்திலும் தனி வணிகர் வல்லுநராக திகழ இயலாது.
3. வரையறாப் பொறுப்பு :
   - வரையறாப் பொறுப்பு அவருடைய ஆர்வத்தை பாதிப்பதாகவும், வியாபாரத்தில் நவீன எண்ணங்களைப் புகுத்தத் தடையாகவும் உள்ளது.
4. குறுகிய வாழ்வு :
   - தனியாள் வணிக உரிமையாளரின் வாழ்வைப் பாதிக்கும் எதுவும் அவருடைய தொழிலையும் பாதிக்கும்.
   - நீண்டகால நோய், அவருடைய இறப்பு, வாரிசுதாரர், ஆர்வமின்மை ஆகியவை வியாபார நடவடிக்கைகளை ஒரு முடிவுக்குக் கொண்டுவரும்.
5. அவசர முடிவு :
   - தனியாள் வணிகத்தில் அவசரத்தில் தவறான முடிவு எடுப்பதற்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு.
   - ஏனெனில் பலருடன் விவாதிக்காமல் தனியாள் ஒருவரே முடிவு எடுக்கிறார். அவசர முடிவுகளில் தொழிலில் நட்டத்தை ஏற்படுத்தலாம்.
6. சிறப்புத் தேர்ச்சியின்மை :
   - கொள்முதல், விற்பனை, கணக்குப்பதிவியல், நிதி திரட்டுதல், விளம்பரம் போன்ற தொழிலின் அனைத்துப் பணிகளையும் தனி வணிகர் ஒருவரே மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.
   - "பல மரம் கண்ட தச்சன் ஒரு மரத்தையும் வெட்டமாட்டான்" என்ற பழமொழி தனியாள் வணிகத்திற்குப் பொருந்தும்.
   - சிறப்பு தேர்ச்சியின் பலனை தனியாள் வணிகம் அடைய முடியாது.
7. கலந்து ஆலோசனையின்மை :
   - தனி வணிகர் சில முக்கிய முடிவுகளை எடுக்கும் போது குடும்ப அங்கத்தினரைத் தவிர பிறரை கலந்து ஆலோசிக்காமல் முடிவு எடுக்கிறார்.
   - அவரது முடிவு தவறானதாகிவிட்டால் இது பெரும் நட்டத்தில் முடிவடையும்.

( அல்லது )

42 ஆ. **நிறுமத்தின் ஏதேனும் ஐந்து வகைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

1. பட்டய அல்லது சாசன நிறுமங்கள்
   - ஒரு நாட்டின் அரசராலோ, அரசியாலோ வழங்கப்பட்ட சாசனத்தின் விளைவாக உருவாக்கப்படும் நிறுமங்கள் பட்டய அல்லது சாசன நிறுமங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
     எ.கா : கிழக்கிந்தியக் கம்பெனி, இங்கிலாந்து வங்கி
   - இந்தியாவில், இவ்வகை நிறுமங்கள் நடைமுறையில் இல்லை.
2. சட்ட முறை நிறுமங்கள்
   - நாடாளுமன்றத்தின் அல்லது மாநிலச் சட்ட மன்றங்களில் இயற்றப்படும் சட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் நிறுமங்கள் சட்டமுறை நிறுமங்கள் எனக் கூறப்படுகின்றன.
     எ.கா : இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம்
3. பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள்
   - 1956-ம் ஆண்டைய நிறுமங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு உருவாக்கப்படும் நிறுமங்கள், பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் என அழைக்கப்படுகின்றன.
   - நாம் நாடெங்கும் பார்க்கும் எண்ணற்ற நிறுமங்கள் இவ்வகையானவையே.
     எ.கா : டாடா மோட்டார்ஸ் லிமிடெட், சத்யம் கம்ப்யூட்டர் சர்வீஸஸ் லிமிடெட், ஈ.ஐ.டி. பாரி லிமிடெட்.
4. உள்நாட்டு நிறுமங்கள்
   - நிறுமங்கள் சட்டம் 1956 அல்லது அதற்கு முன்னர் இருந்த சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுமங்கள் உள்நாட்டு நிறுமங்கள் என அழைக்கப்பெறுகின்றன.
5. அயல்நாட்டு நிறுமம்
   - இந்தியாவுக்கு அப்பால் பதிவு செய்யப்பட்டு, இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல்நாட்டு நிறுமம் எனப்படும்.
6. அரசு நிறுமங்கள்
   - ஒரு நிறுமத்தில் செலுத்தப்பெற்ற பங்கு முதலில் 51 விழுக்காடுக்கு மேல் மைய அரசோ, மாநில அரசுகளோ அல்லது மைய அரசும் ஒன்று அல்லது மேற்பட்ட மாநில அரசுகளுமோ வைத்திருப்பின் அந்நிறுமம் அரசு நிறுமம் ஆகும்.
     எ.கா : பெல் , செய்ல்

44. அ) **கூட்டுறவு அமைப்பின் தன்மைகளை விவரி.**

1. தன்னிச்சையாகச் சேரும் சங்கம் :
   - பலர் தன்னிச்சையாகச் சேர்ந்து உருவாக்கும் அமைப்பே கூட்டுறவுச் சங்கமாகும்,
   - இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேருமாறு ஒருவரை கட்டாயப்படுத்த முடியாது.
   - ஒரு நபர் எப்போது வேண்டுமானாலும் இச்சங்கத்தில் சேரலாம். அது போலவே விரும்பும் போது அவர் அதிலிருந்து விலகலாம்.
2. சமத்துவம் :
   - கூட்டுறவுச் சங்கத்தில் எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை உண்டு.
   - அதிகமான முதலீடு, ஒருவர் அளிக்கும் காரணத்தால் அதிக உரிமை அவருக்கு கிடையாது.
3. மக்களாட்சி முறையில் மேலாண்மை :
   - கூட்டுறவு சங்கத்தின் மேலாண்மை மக்களாட்சி அடிப்படையில் அமைந்திருக்கிறது.
   - உறுப்பினர் மூலதனப் பங்குத் தொகையாக எவ்வளவு செலுத்தியிருந்தாலும் அவருக்கு ஒரு வாக்கு மட்டுமே உண்டு.
   - ஆளுக்கொரு வாக்கு என்ற சமத்துவ அடிப்படையில் மக்களாட்சி முறையில் இச்சங்கம் அமைக்கப்பட்டுள்ளது.
4. ஒரு முனைப்படுத்திய முயற்சி :
   - இந்த அமைப்பில் எல்லாத் தனி நபர்களும் இணைந்து பணியாற்றுகின்றனர்.
   - கூட்டுறவு அமைப்பின் முக்கிய கோட்பாடு ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொருவருக்காக.
5. சேவையின் தத்துவம் :
   - கூட்டுறவு அமைப்பின் முதன்மை நோக்கம் சேவை புரிவது, இரண்டாவது நோக்கம் இலாபம் ஈட்டுவது ஆகும்.
   - கடன் வசதி, வீடு கட்ட கடன், விதை, உரம் போன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான சேவையை அளிக்கிறது.


B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT.

6. பன்மர் உறுப்பினராதல் :
   - ❖ இதனை உருவாக்கக் குறைந்தபட்சம் 25 நபர்கள் தேவை. அதிகபட்சம் வரையறை ஏதும் இல்லை.
7. உறுப்பினராவதற்குத் தடையில்லா வாய்ப்பு :
   - ❖ பொதுவான பொருளாதார நோக்கமுள்ள ஆண், பெண் எவரும் இவ்வமைப்பில் உறுப்பினராகச் சேரலாம்.
   - ❖ சாதி, சமய பாகுபாடுகள் எதுமின்றியும் பெரிய பணக்காரரும், வறிய ஏழையும் இதில் உறுப்பினர் ஆகலாம்.

( அல்லது )

**44. ஆ) பங்கு மாற்றகத்தின் தீமைகளை சுருக்கமாக எழுதுக.**

1. அமைப்பு முறைகளில் சீரான தன்மையும், கட்டுப்பாடும் இல்லாதது முக்கிய குறைபாடாகும்.
2. பங்கு மாற்றகங்களில் உறுப்பினர்களாவதற்குக் கட்டுப்பாடுகள் ஏதுமில்லை. இந்தியாவில் எந்த ஒரு பங்கு மாற்றகமும் உறுப்பினராவதற்குரிய குறைந்தபட்ச கல்வித்தகுதியை வரையறுக்கவில்லை.
3. பல நேரங்களில் பங்கு மாற்றகங்கள் விரும்பத்தகாத ஆரோக்கியமற்ற ஊகவாணிகத்தைக் கட்டுப்படுத்த தவறியிருக்கிறது.
4. பங்கு மாற்றகங்களில் பங்குகள் பட்டியலிடப்படுவதற்குச் சரியான விதிமுறைகள் பின்பற்றப்படுவதில்லை.
5. விளைபொருள் மாற்றகங்களில் இருப்பது போன்று, பக்க விலக்கு அளி அல்லது மிகை அளவு ஏதுமில்லை.
6. சில நகரங்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட பங்கு மாற்றகங்கள் செயல்படுகின்றன.

---

**45. அ) தனிநபர் வியாபாரத்தின் நன்மைகளில் எதேனும் ஐந்தினை விவரி**

1. எளிதான அமைப்பு :
   - ❖ தொழிலமைப்பு வடிவங்களில் தனியாள் வணிகத்தை மட்டுமே சட்டச் சிக்கல்கள் ஏதுமின்றித் துவக்கலாம் .
   - ❖ ஒப்பந்தம், பதிவு முதலியன தனியாள் வணிகத்திற்குத் தேவையில்லை.
2. நேரடி ஊக்குவிப்பு :
   - ❖ வியாபாரத்தில் இலாபம் முழுவதும் தனியாள் வணிகரையே சேர்கிறது. அதில் வேறு எவரும் பங்கு கோர முடியாது.
3. நெகிழ்வுத் தன்மை :
   - ❖ தனி வணிகர் ஒருவரே , உரிமையாளர் என்பதால், சந்தை நிலவரத்திற்கு ஏற்பவும் , வாடிக்கையாளரின் விருப்பத்திற்கு ஏற்பவும், தன் வியாபாரத்தை மாற்றிக் கொள்ளலாம்.
4. வியாபார இரகசியங்களைக் காத்தல் :
   - ❖ வியாபார வெற்றிக்கு, வியாபார இரகசியங்களைக் காத்தல் மிகவும் இன்றியமையாததாகும்.
   - ❖ இதற்கு தனியாள் வணிக முறை பெரிதும் உயர்ந்தது.
   - ❖ ஏனெனில் தன் வியாபார முடிவுகளை (இரகசியங்களை) தனியாள் வணிகர் யாரிடமும் பகிர்ந்து கொள்ள வேண்டியதில்லை.
5. விரைவான முடிவு :
   - ❖ தானே உரிமையாளராகவும் இருப்பதால் , முடிவு எடுக்கும் முன்பு அவர் வேறு எவரையும் கலந்து ஆலோசிக்க வேண்டிய அவசியமில்லை.
   - ❖ எனவே அவர் காலதாமதமின்றி விரைவான முடிவு எடுக்க முடியும்.



6. அதிக வெகுமதி :
   - ❖ தனியாள் வணிகர், தன் வியாபாரத்தை சரிவர கவனிக்கத் தவறினால் நட்டம் ஏற்பட்டுவிடும்.
   - ❖ இந்த நட்ட அச்சம் தனியாள் வணிகரின் கடின உழைப்பிற்குத் தூண்டுகோலாய் அமைகிறது.
7. அதிகளவு விற்பனை :
   - ❖ தனியாள் வணிகரே வியாபாரத்தை நிர்வகிப்பதால் தன் வாடிக்கையாளர்களுடன் நேரடித் தொடர்பு வைத்துக் கொள்கிறார்.
   - ❖ எனவே அவர், தன் வாடிக்கையாளர்களையும் அவர்களின் விருப்பு வெறுப்புகளையும் நன்கு அறிவார்.
   - ❖ இதனால் விற்பனை அதிகரித்து வியாபாரத்தின் நற்பெயர் உயர்கிறது.
8. எளிதான கலைப்பு :
   - ❖ தனியாள் வணிகத்தை கலைப்பது மிகவும் எளிது.
   - ❖ தனியாள் வணிகர் தான் விரும்பியபோது அவரது வணிக அமைப்பினை எவ்வித சட்டமுறை சிக்கலும் இல்லாமல் கலைக்கலாம்.

( அல்லது )

**45 ஆ) கூட்டாளிகளின் வகைகளை சுருக்கமாக விவரி. ( எதேனும் ஐந்து )**

1. உழைக்கும் கூட்டாளி :
   1. இவர் தொழிலில் முதலிடுவார்.
   2. தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறுவார்.
   3. இவரின் பொறுப்பு வரையறா பொறுப்பு ஆகும்.
   4. இவரை பணிபுரியும் கூட்டாளி அல்லது மேலாண்மைக் கூட்டாளி என அழைப்பர்.
2. உறங்கும் கூட்டாளி அல்லது உழையாக் கூட்டாளி :
   1. இவர் தொழிலில் முதலிடுவார்.
   2. தொழில் நிர்வாகத்தில் பங்கு பெறமாட்டார்.
   3. இவரை உழையாக் கூட்டாளி அல்லது முதலிடும் கூட்டாளி என அழைப்பர்.
3. பெயரளவு கூட்டாளி :
   1. இவர் தொழிலில் முதலீடு செய்ய மாட்டார்.
   2. தொழில் நிவாகத்தில் பங்கு பெற மாட்டார்.
   3. இலாபத்தில் இவருக்கு பங்கு இல்லை.
   4. கூட்டாளியாக தன் பெயரை பயன்படுத்த அனுமதிப்பார்.
4. இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி :
   1. இவர் இலாபத்தில் மட்டும் பங்குபெறுவார்.
   2. நட்டத்தில் பங்குபெற மாட்டார்.
   3. தொழில் நிர்வாகத்திலும் பங்குபெற மாட்டார்.
   4. இவரின் பொறுப்பு வரையறா பொறுப்பு ஆகும்.
5. முரண் தடைக் கூட்டாளி :
   1. இவர் உண்மைக் கூட்டாளி அல்ல.
   2. தானும் ஒரு கூட்டாளி என நம்பச் செய்கிறார்.
   3. இதை நம்பி சிலர் நிறுவனத்திற்கு கடன் கொடுப்பர்.
   4. இவர் அவர்களுக்கு பொறுபாகிறார்.
6. உரிமைப் போலிக் கூட்டாளி :
   1. இவர் உண்மைக் கூட்டாளி அல்ல.
   2. நிறுவனம் இவரைக் கூட்டாளி எனச் சொல்லும்.
   3. இதை அவர் மறுத்துரைக்க வேண்டும்.
   4. இல்லையெனில், கூட்டாண்மையுடன் தொடர்புடையவர்களுக்கு பொறுப்பாகிறார்.

7. <u>துணைக் கூட்டாளி :</u>
   1. இவர் உண்மைக் கூட்டாளி இல்லை.
   2. ஒரு கூட்டாளியுடன் இலாபத்தை பங்கிட்டுக் கொள்கிறார்.
   3. இவருக்கு வியாபாரத்தில் எந்த உரிமையும் இல்லை.

46. அ) அமைப்பு முறையேடு - செயல்முறை விதிகள் வேறுபடுத்துக.

| வ எண் | அடிப்படை | அமைப்பு முறையேடு | செயல்முறை விதிகள் |
|---|---|---|---|
| 1 | வேற்றுமையின் பொருளடக்கம் | அடிப்படை முடிவுகளடங்கிய நிறுமத்தின் அமைப்பேடாகும் | நிறுமத்தின் உள்விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் அடங்கிய ஏடாகும், |
| 2 | உறவு முறைகள் | நிறுமத்திற்கும், வெளி உலகிற்கும் உள்ள உறவு முறையை குறிப்பிடும் சாசனமாகும் | உறுப்பினர்களுக்கும், நிறும மேலாண்மைக்கும் உள்ள உறவினை வரையறுக்கிறது |
| 3 | பதிவு | நிறுமம் பதிவு செய்வதற்கு முன், இதனை தயார் செய்து நிறும பதிவாளரிடம் தாக்கல் செய்தல் வேண்டும். | நிறுமப்பதிவு செய்வதற்கு இவ்வாவணம் தேவையில்லை. |
| 4 | மாற்றம் செய்தல் | மாற்றம் செய்வதற்கு கடுமையான தடைகள் உண்டு. | ஒரு சிறப்பு தீர்மானத்தின்படி இதில் உச்ச அளவு மாற்றம் செய்யலாம் |
| 5 | மீறல் | நிறும ஒப்பந்தத்தில் ஈடுபடுவதற்கு முன், ஒவ்வொரு வெளிநபரும், அமைப்பு முறையேட்டின் உட்பிரிவுகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும் | அமைப்பு முறையேட்டில் காணப்படும் விதிமுறைகளை, நிறுமம் முழுதும் கடைபிடிக்கும் என நம்பலாம். |
| 6 | இயல்பு | இது ஒரு சாசனமாக விளங்குவதால், இது தலைசிறந்த ஆவணமாக கருதப்படுகிறது | இது நிறும அமைப்பு முறையேட்டின் துணை ஆவணமாகக் கருதப்படுகிறது. |

( அல்லது )

46 ஆ) முன்னுரிமைப் பங்குகளின் வகைகளில் ஐந்தினை விளக்குக.

1. <u>குவி முன்னுரிமைப் பங்குகள்</u>
   - போதிய ஆதாயம் ஈட்டாவிடில், பங்காதாயம் வழங்கப்படாது. எனினும் அந்தாண்டில் பங்காதாயம் பெறும் உரிமை இவ்வகைப் பங்குநர்கட்குக் காலாவதி ஆவதில்லை.
   - வழங்கப்படாத பங்காதாயத்தை நிலுவையாகப் பெறும் உரிமை படைத்த பங்குதான் குவி முன்னுரிமைப் பங்கு என்று கூறப்படுகிறது.
2. <u>குவியா முன்னுரிமைப் பங்குகள்</u>
   - குறிப்பிட்ட ஒரு ஆண்டில் இலாபம் இல்லாத காரணத்தால், பங்காதாயம் வழங்கவில்லையெனில், பங்காதாயம் காலாவதியாகிவிடுகிறது.
   - பின்வரும் ஆண்டுகளில் நிரம்ப லாபம் ஈட்டியிருப்பின், முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பெறாப் பங்காதாயத்தை நிலுவையில் உள்ளதாகக் கருதி கொடுக்கப்பட மாட்டாது.
   - இத்தகைய பங்குகள்தான், குவியா முன்னுரிமைப் பங்குகள் எனப்படும்.



3. <u>எஞ்சிய இலாபத்தில் பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகள்</u>
   - இலாபத்தில் குறிப்பிட்ட நிலையான சதவிகிதம் முன்னுரிமைப் பங்குநர்கட்குப் பங்காதாயமாக வழங்கப்பெறும்.
   - குறிப்பிட்ட விழுக்காடு பங்காதாயத்தை முன்னுரிமைப் பங்குநர்கட்கு வழங்கிய பின்னர், நேர்மைப் பங்குநர்கட்கு இயக்குநர் அவை பரிந்துரைக்கும் வீதத்தில் பங்காதாயம் வழங்கும்.
   - பங்காதாயம் வழங்கிய பின்னரும் இலாபம் மிஞ்சியிருப்பின், ஒப்புக்கொண்டவாறு, மீண்டும் குறிப்பிட்ட சதவிகிதப் பங்காதாயம் முன்னுரிமைப் பங்குகள் மீது வழங்கப்படும்.
   - இத்தகைய பங்குகள் எஞ்சிய இலாபத்தில் பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகள் எனப்படும்.
4. <u>எஞ்சிய இலாபத்தில் பங்கேற்கா முன்னுரிமைப் பங்குகள்</u>
   - குறிப்பிட்ட நிலையான பங்காதாயம் பெறுவதற்கு முன்னுரிமை உண்டு. அவ்வாறே நிறுமக் கலைப்பின்போதும் புறக்கடன்களை அடைத்தபின்னர் பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும் முன்னுரிமை உண்டு.
   - எஞ்சிய இலாபத்திலோ, கலைப்பின்போது எஞ்சியிருக்கும் சொத்துக்களிலோ மீண்டும் உரிமை கோர முடியாது. இறுதியில் எஞ்சியது முழுவதும் நேர்மைப் பங்குகட்கே வழங்கப்படும்.
   - முன்னரே குறிப்பிட்டவாறு நிறுமத்தின் செயல்முறை விதிகள் குறிப்பிட்டுக் கூறவில்லையாயின் முன்னுரிமைப் பங்குகள், எஞ்சிய இலாபத்தில் பங்கேற்கா முன்னுரிமைப் பங்குகள் வகையைச் சார்ந்தவை என்றே கருதப்படும்.
5. <u>மாற்றற்குரிய முன்னுரிமைப் பங்குகள்</u>
   - குறிப்பிட்டக் காலக் கெடுவுக்குள் முன்னுரிமைப் பங்குகளை நேர்மைப் பங்குகளாக மாற்றிக்கொள்ளலாம் என்றால், இவை மாற்றற்குரிய முன்னுரிமைப் பங்குகள் என அழைக்கப்பெறும்.
   - நேர்மைப் பங்குகளாக மாற்றிக்கொள்ளும் உரிமை உடையவை இவை.
6. <u>மாற்ற இயலா முன்னுரிமைப் பங்குகள்</u>
   - முன்னுரிமைப் பங்குகளை நேர்மைப் பங்குகளாக மாற்றிக்கொள்ள முடியாதெனில், அவை மாற்ற இயலா முன்னுரிமைப் பங்குகள் என அழைக்கப்படுகின்றன.
7. <u>மீட்க இயலா முன்னுரிமைப் பங்குகள்</u>
   - மீள்தகு முன்னுரிமைப் பங்குகள் எனக் குறிப்பிட்டு வெளியிடப்படாத, எந்த முன்னுரிமைப் பங்குகளும், மீட்க முடியா முன்னுரிமைப் பங்குகளாகும்.
   - நிறுமம் தன் வாழ்நாளில் இவற்றை மீட்க இயலாது.

47. அ) தகவலறிக்கை என்றால் என்ன ? அதன் உள்ளடக்கங்கள் யாவை?

- ஒரு பொது நிறுமம் தனது பங்குகளையோ, கடனீட்டுப் பத்திரங்களையோ வாங்க பொதுமக்களை அழைக்க வெளியிடும் எந்த ஒரு ஆவணமும் தகவலறிக்கை எனப்படும்.

<u>உள்ளடக்கம்</u> ( பதினோராம் வகுப்பு பாடப் பகுதியிலிருந்து.....)

1 தகவலறிக்கை, நிறுமத்தின் நோக்கத்தை உள்ளடக்கியிருக்க வேண்டும். அதில் நிறுமத்தின் அமைப்பு முறையேட்டில் கையெழுத்திட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் அவர்கள் வைத்துள்ள பங்குகளின் எண்ணிக்கை

2 இயக்குநர்கள், மேலாண்மை இயக்குநர்கள் ஆகியோரின் பெயர், முகவரி மற்றும் தொழில் ஆகிய விவரங்கள்

3 வெளியிடப்படும் பங்குகள் மற்றும் கடனீட்டு பத்திரங்களின் வகைகள் மற்றும் எண்ணிக்கை

4 இயக்குநர்களின் தகுதிப்பங்குகள் குறித்த விவரங்கள்

5 கடந்த இரண்டாடுகளில், ரொக்கத்திற்கு அல்லாமல், வேறு மறுபயனுக்காக வெளியிடப்பட்ட பங்குகள் அல்லது கடனீட்டு பத்திரங்கள் குறித்த விவரங்கள்.

6 இயக்குநர்கள், செயலர்கள் மற்றும் மேலாண்மை இயக்குநர்களின் விவரங்கள் மற்றும் ஊதியம்

7 குறுமப் பங்கொப்பத் தொகை

( அல்லது )

47 ஆ) " சிறுதுளி பெருவெள்ளம் " என்ற கூற்றுக்கு இணங்க பரஸ்பர நிதி பற்றி எழுதுக.

**வரைவிலக்கணம்.**

- இந்திய பத்திர மற்றும் மாற்றகங்கள் வாரியம் ஒழுங்கு படுத்துதல் 1993 விதிகளின்படி, 'பரஸ்பர நிதி' என்பது, "அறக்கட்டளை அல்லது கூட்டுரு அமைப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு நிதி. இதன் அறங்காப்பாளர்கள் ஒன்றுக்கும் மேற்பட்ட திட்டங்களின் கீழ் சிறு அலகுகள் மூலமாக பொதுமக்களிடமிருந்து பணத்தை மூலதனமாகப் பெற்று நிறுமம் மற்றும் பல்வேறு வாணிப நிறுவனங்களின் தங்கள் அமைப்பின் சட்டத்திற்குட்பட்டு முதலீடு செய்யும்" என வரைவிலக்கணம் கொடுத்துள்ளது.
- பரஸ்பர நிதிகள் சிறு முதலீட்டாளர்களின் சேமிப்பைத் திரட்டி, அவற்றை அரசு மற்றும் பிற நிறுமங்களின் பத்திரங்களில் முதலீடு செய்து, மூலதன ஆதாயம் பெறுவதுடன், வட்டி மற்றும் பங்காதாயத்தையும் பெறுகிறது.
- 'சிறுதுளி பெருவெள்ளம்' என்ற கோட்பாட்டின்படி இவை செயல்படுகின்றன.

**நன்மைகள்**

1. சிறு முதலீட்டாளர்களின் சேமிப்பை ஒன்று திரட்டி அவற்றை நிறுமங்களில் முதலீடு செய்கிறது.
2. பரஸ்பர நிதிகள் பெற்றிருக்கும் பல முதலீட்டுத் திட்டங்களில், சிறு மற்றும் மத்திய தர முதலீட்டாளர்கள் பங்குகொள்ளும் பயனை அளிக்கிறது. பலதரப்பட்ட பங்குகள், பிணையங்களில் முதலீடு செய்வதன் மூலம் பரஸ்பர நிதிகள் தங்களுக்கு ஏற்படும் இடர்களைப் பரவலாக்குகிறது. இது சிறிய மற்றும் மத்தியதர முதலீட்டாளர்களுக்கு இயலாது.
3. பரஸ்பர நிதிகள் தம் வாடிக்கையாளருக்குக் குறைந்த செலவில் திறமையான முதலீட்டுச் சேவையாற்றுகின்றன.
4. குறிப்பிட்ட பரஸ்பர நிதிகள் தங்கள் வாடிக்கையாளருக்குத் தனிப்பட்ட வரிச் சலுகைகளை அளிக்கின்றன.
5. சில பரஸ்பர நிதிகள், அலகுகளை ஒரு திட்டத்திலிருந்து மற்றொரு திட்டத்திற்கு மாற்றிக்கொள்ள அனுமதியளிக்கின்றன. இதனால், எளிதாக மாற்றிக்கொள்ளக்கூடிய முதலீட்டுத் திட்டங்களை அளிக்கின்றன.
6. சிறு முதலீட்டாளர்களின் சிறுசேமிப்பை ஒன்று திரட்டி, அவற்றைத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான நிலை முதலை வழங்குவதன் மூலம் தொழில்துறை முன்னேற்றத்தை உண்டாக்குகிறது.
7. ஆரம்ப பொது விடுப்புகளுக்குச் சிறந்த மாற்றாக பரஸ்பர நிதிகள் விளங்குகின்றன.